மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்திய 3 திட்டங்களை இங்கிலாந்தில் தேர்தல் அறிக்கையாக வெளியிட்டு தொழிலாளர் கட்சி மாபெரும் வெற்றி

தமிழக அரசு பெருமிதம்

சென்னை, ஜூலை 6

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்திய 3 திட்டங்களை இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சி தேர்தல் அறிக்கையாக வெளியிட்டு மாபெரும் வெற்றி பெற்றுள்ளது என்று தமிழக அரசு பெருமிதத்துடன் கூறியுள்ளது.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக உயர்த்துவதில் உறுதிகொண்டு உன்னதமான பல திட்டங்களை உருவாக்கி வருகிறார். இந்த திட்டங்கள் தமிழ்நாட்டு மக்களிடமும் இந்தியாவின் இதர மாநிலங்களிலும் மிகுந்த வரவேற்பை பெற்று வருகின்றன.

அத்திட்டங்களில் "முதல் அமைச்சரின் காலை உணவுத் திட்டம்", "நான் முதல்வன் திட்டம்", "கலைஞர் கனவு இல்லம் திட்டம்" ஆகிய மூன்றும் இங்கிலாந்து நாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் 31,008 அரசுப் பள்ளிகளில் 18 லட்சத்து 54 ஆயிரம் மாணவ மாணவியர் சூடான, சுவையான காலை உணவை உண்டு மகிழ்ச்சியுடன் படிப்பில் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். காலை உணவு உண்ணாமல் பள்ளி செல்லும் குழந்தைகளை எண்ணிக் கவலை கொண்டிருந்த தாய்மார்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

இத்திட்டத்தை, தெலுங்கானா மாநில அரசு உள்பட பல்வேறு மாநிலங்கள் வரவேற்றுள்ளன. மேலும், கனடா நாட்டு பிரதமர் இத்திட்டத்தை வரவேற்று தம்முடைய நாட்டில் நடைமுறைப்படுத்தி உள்ளார்.

'நான் முதல்வன்' திட்டத்தின் அடிப்படை நோக்கம் கல்விக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையே உள்ள இடைவெளியை குறைப்பதில் உள்ளது. நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களில் 76.4 சதவீதம் என்ஜினியரிங் மாணவர்களும், 83.8 சதவீதம் கலை மற்றும் அறிவியல் மாணவர்களும் தொடர்ந்து வேலைவாய்ப்புகளை பெற்று வருகின்றனர். கடந்த ஆண்டில் மட்டும் 1 லட்சத்து 48 ஆயிரத்து 149 இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் இளைஞர்களிடமும் பெற்றோரிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

தேர்தல் அறிக்கை

வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குவதுடன் வீடுகட்டுவதற்கான தொகையை அரசு அவரவர் வங்கிக் கணக்குகளில் செலுத்தி பயனாளிகளே தங்கள் கனவு இல்லங்களை தாங்களே உருவாக்கிக் கொள்ளும் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்திய இந்த 3 திட்டங்களையும் இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் வெளியிட்டு மக்களின் ஆதரவைப் பெற்று மாபெரும் வெற்றிகண்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற பொதுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ஸ்ரீநிதி சிதம்பரம், திருவாரூர் பக்தவச்சலம், கவிஞர்கள் நந்தலாலா, நெல்லை ஜெயந்தா உள்ளிட்ட 17 பேர் சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் சுற்றுலாத்துறை முதன்மை செயலாளர் சந்திரமோகன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன் ஆகியோர் உள்ளனர்.

எங்கிருந்தும், எந்த நேரத்திலும் இணையவழிச்சேவை மூலம் பட்டா–சிட்டா ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம்

சென்னை, ஜூலை 6-

எங்கிருந்தும், எந்த நேரத்திலும் பட்டா, சிட்டா ஆவணங்களை பதிவிறக்கும் செய்யும் வசதியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் நில அளவை மற்றும் நிலவரித்திட்டத்தின் இயக்குனர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நில உரிமைதாரர்கள் பயனடையும் வகையில் கீழ்க்காணும் இணைய வழிச்சேவைகள் நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையால் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புறம், நகர்ப்புறம் மற்றும் நத்தம் ஆகிய பகுதிகளுக்கான பட்டா மாற்றம் மேற்கொள்ள https://tamilnilam.tn.gov.in/citizen/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

நில உரிமைதாரர்கள் புல எல்லைகளை அளந்து அத்து காட்டக் கோருவதற்கு https://tamilnilam.tn.gov.in/citizen/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

எங்கிருந்தும் எந்நேரத்திலும் என்ற இணையவழிச் சேவையை (https://eservices.tn.gov.in) பயன்படுத்தி, கிராமப்புற மற்றும் நத்தம் நில ஆவணங்களின் பட்டா / சிட்டா, 'அ' பதிவேடு மற்றும் புலப்படம் ஆகியவற்றையும், நகர்ப்புற நிலஅளவைப் பதிவேட்டின் நகல், நகர நிலஅளவை வரைபடம் மற்றும் புல எல்லை வரைபடம் / அறிக்கை ஆகியவற்றையும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பட்டா மாற்றத்திற்கு அளித்த விண்ணப்பத்தின் நிலையை அறிந்து கொள்ளலாம்.

கிராம வரைபடங்கள் மற்றும் பழைய நிலஅளவை எண்களுக்கான புதிய நிலஅளவை எண்களின் ஒப்புமை விளக்கப்பட்டியல் போன்றவற்றை https://tnlandsurvey.tn.gov.in எனும் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதில் முதல் 2 சேவைகளை தங்கள் அருகிலுள்ள பொதுச்சேவை மையங்கள் மூலமாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் கமிஷனிடம் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களின் செலவு விவரங்கள் 19ம் தேதி தாக்கல்

சென்னை, ஜூலை 6-

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் செலவு கணக்கு விவரங்கள் அனைத்தும் இந்திய தேர்தல் கமிஷனிடம் 19ம் தேதிக்குள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் 19ம் தேதி நடந்தது. தேர்தலில் பதிவான வாக்குகள் கடந்த ஜூன் 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்தத் தேர்தலில் 950 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களில் 603 பேர் சுயேச்சை வேட்பாளர்களாகும்.

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலுக்காக அதிகபட்சம் ரூ.95 லட்சம் வரை செலவழிக்கலாம். அந்த செலவு கணக்கு விவரங்களை 3 கட்டங்களாக வேட்பாளர் தாக்கல் செய்ய வேண்டும். வேட்பாளராக தேர்வான பிறகு ஒரிரு வாரத்தில் முதல்கட்ட கணக்கு விவரத்தையும், பின்னர் சில நாட்களில் 2வது கணக்கு விவரத்தையும் தாக்கல் செய்ய வேண்டும். இறுதியாக, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் தேர்தல் செலவு விவரங்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

அதன்படி, தேர்தல் முடிவுகள் வெளியான ஜூன் 4ம் தேதியில் இருந்து 30 நாட்கள் கடந்துள்ள நிலையில் இம்மாதம் 4ம் தேதிக்குள் செலவு கணக்கு விவரங்களை அனைத்து வேட்பாளர்களும் தாக்கல் செய்திருக்க வேண்டும். அதன்படி, கடந்த வியாழக்கிழமையுடன் அதற்கான கால அவகாசம் நிறைவடைந்துவிட்டது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் செலவு விவரங்கள் அனைத்தும் தற்போது அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரியிடம் இருக்கின்றன. அவற்றை தேர்தல் கமிஷனின் பார்வையாளர் துணையுடன் மாவட்டத் தேர்தல் அதிகாரி ஆய்வு செய்து வருகிறார்.

ஆய்விற்குப் பிறகு ஆய்வறிக்கை தயாரிக்கப்படும். அந்த ஆய்வறிக்கை வரும் 11ம் தேதிக்குள் மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரியின் அலுவலகத்துக்கு மாவட்டத் தேர்தல் அதிகாரி அனுப்பி வைப்பார். இந்த ஆய்வறிக்கை தலைமை தேர்தல் அதிகாரி ஆய்வுக்கு உட்படுத்துவார்.

பின்னர் அந்த அறிக்கை இந்திய தேர்தல் கமிஷனுக்கு வரும் 19ம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர், தேர்தல் செலவு கணக்கு விவரங்களை தாக்கல் செய்யாத வேட்பாளர்கள் யார்? யார்? என்பது கண்டறியப்படும். அவர்களுக்கு குறிப்பிட்ட சில ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதித்து தேர்தல் கமிஷன் உத்தரவு பிறப்பிக்கும்.

AUTHUM ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

கோரிக்கை அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 707, ஏதேனும் [illegible], நரிமன் பாயின்ட், மும்பை 400 021. Ph.: (022) 6747 2117 Fax: (022) 6747 2118 E-mail: info@authum.com

[illegible]

[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
1	[illegible]	[illegible]	23-02-2021	15-04-2024	[illegible]	ரூ.25,00,000/- [illegible]
[illegible]						
2	[illegible]	[illegible]	30-01-2016	27-05-2024	ரூ.71,74,083/- [illegible]	[illegible]
[illegible]						
3	[illegible]	[illegible]	16-03-2021	24-05-2024	[illegible]	ரூ.1,50,00,000/- [illegible]
[illegible]						
4	[illegible]	[illegible]	08-04-2020	14-06-2024	[illegible]	ரூ.15,00,000/- [illegible]
[illegible]						
5	[illegible]	[illegible]	[illegible]	24-05-2024	[illegible]	[illegible]
[illegible]						

[illegible]

ENROLLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within three months thereafter, I, R Allan S/o Russel Raj aged 22 years permanently residing at: No.22, VGP Avenue Extension 3rd Cross Street, Matukuppam, Thoraipakkam, Chennai 600097 intend having my enrolment as an advocate moved before The Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High Court campus, Chennai-600 104. Those who have valid objections may notify the same to the Bar council within Ten days.

- R.Allan

படிவம் எண். INC 26

[illegible]

BEFORE THE COMMERCIAL COURT CHENNAI AT EGMORE

COS No. 180 of 2023

The Shipping Corporation of India Ltd,
Registered Office at 245- Madame Cama Road,
Mumbai - 400 021 and
Regional office at 4 Jawahar Building No.17,
Rajaji Salai, Chennai-600 001
Represented by its Authorized Signatory and
Deputy General Manager
Mr. V. Azhaguvel .. Plaintiff

Vs

1. M/s H.M Shipping,
   Seven Wells,
   No:22/ 169, Coral Merchant Street
   Chennai, Pin - 600 001
   Rep by its Partner Mr. K Mohamed Badrudeen.
2. Mr. K Mohamed Badrudeen
   Partner, M/s H.M Shipping,
   Seven Wells,
   No:22/169, Coral Merchant Street
   Chennai, Pin - 600 001
3. Mr. Hassan Adur Yusuf
   Partner, M/s H.M Shipping,
   Seven Wells,
   No:22/169, Coral Merchant Street
   Chennai, Pin – 600 001 .. Defendants

Please take note that the above suit filed against all of you before the Hon'ble Commercial Court Chennai at Egmore by the Plaintiff seeking recovery of an amount of Rs.38,42,858.06/- (Rupees Thirty Eight lakh Forty Two Thousand Eight Hundred Fifty Eight and Six Paise Only) along with 18% interest per annum on Rs.25,14,926.14/- (Rupees Twenty Five Lakhs Fourteen Thousand Nine Hundred Twenty Six and Paise Fourteen only) from the defendants from the date of filing of the suit till realization. Due to continuous non-appearance of the Defendants, the Hon'ble Judge was pleased to order substituted service by paper publication on all the three Defendants vide order dtd 02.07.2024. Hence, the Defendants are hereby called upon to take note of the same and appear before the Hon'ble Commercial Court Chennai at Egmore on the next date of hearing i.e., 06.08.2024 at 10.15 am, either in person or through their counsel in the above suit, failing which the matter will be decided in your absence.

JOY THATTIL ITTOOP
Counsel for Plaintiff

பொது அறிவிப்பு

சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், திருவான்மியூர் கிராமம், சர்வே எண் 165/2 பார்ட், மனை எண் B, அடுக்குமாடி குடியிருப்பு எண் FFB4 [illegible] திருவான்மியூர், சென்னை 600 041 [illegible] 2640 [illegible] 794 [illegible] 1430 [illegible] 24.03.2006 [illegible] 2237/2006 [illegible] 5 [illegible]

தே.குமார், வழக்கறிஞர்
21/3, கோவிந்தராஜபுரம் 2வது தெரு, அடையாறு, சென்னை 600020.
தொலைபேசி எண்.9444019441

BEFORE THE HONOURABLE XXVIII ASST. CITY CIVIL COURT, CHENNAI

E.P.No.1230 of 2023

IN

A.R.C.No.242 of 2019

Margadarsi Chits Private Limited .. Petitioner/Decree Holder

Versus

M/s Subramaniya Traders and others

.. Respondents/Judgement Debtors

To
Mr.V.Prabhu Somalingam – JD2
S/o. A.R.Venkatachalam,
Flat No.S-3, No.56A & 56B, Om Sakthi Nagar II Street,
Maduravoyal, Chennai-600 095.

Please take notice that the above referred Execution Petition filed by my above client against you for sale of your immovable property stands posted on 23.07.2024 for your appearance, please appear before the above said court on 23.07.2024 at 10.30 A.M. in the Honourable XXVIII Asst. City Civil Judge, Chennai, either personally or through your advocate failing which the case will be decided as exparte, by the above said court.

ATTACHED PROPERTY BELONGING TO 2nd RESPONDENT/OPPONENT (Doc. No.451/2012)

SCHEDULE – A

All that piece and parcel of Land bearing Plot No.40 & 41, T.K.Pani Street, Periyar Nagar, Nesapakkam, Chennai - 600 078, comprised in Survey Nos.105/1 & 104, as per Patta Survey Nos 105/3 & 104/4, measuring an extent of 6089 Sq.ft.

Bounded on the
North By: Plot belongs to Mr.Mahendran.
South By: T.K.Pani Street.
East By: Land belongs to Mr.Shanmuga Naicker.
West By: Little Flower School.

situate within the Sub - Registration District of Virugambakkam and Registration District of Chennai South.

SCHEDULE "B"

3.75 % (228.34 Sq.ft) of undivided share of land in "A" Schedule mentioned property, 600 Sq.ft plinth area of Flat No.F-2 in I Floor, Sri Kumaran Apartments, T.K.Pani Street, Periyar Nagar, Nesapakkam, Chennai - 600 078.

[illegible]

Redington

ரெடிங்டன் லிமிடெட்

(முன்னர் ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்)
CIN: L52599TN1961PLC028758
பிளாக் 3, பிளாத்தின், ரெடிங்டன் டவர், இன்னர் ரிங் ரோடு,
சரஸ்வதி நகர் மேற்கு, 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600091.
Email: Investors@redingtongroup.com | Website: www.redingtongroup.com
Telephone No: +91-44-42243363 | CIN: L52599TN1961PLC028758

31வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013ன் ("சட்டம்") பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா [illegible] 2015–ன் பொருந்தக்கூடிய விதிமுறைகளுடன், [illegible] அமைச்சகம் (MCA) செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை 09/2023 மற்றும் செபி சுற்றறிக்கை எண். அக்டோபர் 7, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) [illegible] (AGM) [illegible] 30, 2024 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) [illegible] (VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. [illegible] VC/OAVM மூலம் [illegible]

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு உள்ளிட்ட 2023–24–ம் நிதி ஆண்டுக்கான ஆண்டறிக்கை [illegible] www.redingtongroup.com, [illegible] www.nseindia.com [illegible] 5, 2024 அன்று நிறைவடைந்தது.

[illegible]

a) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும் தேதி மற்றும் நேரம்: வெள்ளிக்கிழமை, ஜூலை 26, 2024, காலை 9.00 மணி (இந்திய நேரப்படி)
b) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவுறும் தேதி மற்றும் நேரம்: திங்கட்கிழமை, ஜூலை 29, 2024, மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி)
c) ஜூலை 29, 2024 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது.
d) 31வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதற்காக உறுப்பினர்களின் உரிமை கணக்கிடப்படும் கட் ஆப் தேதி: புதன்கிழமை, ஜூலை 24, 2024.
e) கட் ஆப் தேதியின்படி உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பெற உரிமை உண்டு.
f) கம்பெனியின் பங்குகளை பெற்று அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினரான நபர் மற்றும் கட் ஆப் தேதியான ஜூலை 24, 2024 அன்று பங்குகளை வைத்துள்ளவர் அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க/பங்கேற்க தகுதியுள்ள நபருக்கு உள்நுழைவு விவரங்கள் இல்லை என்றால் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம்.
g) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காமல் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
h) உறுப்பினர்கள் ஒரு முறை வாக்களித்துவிட்டால் பின்னர் அதனை மாற்ற முடியாது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

[illegible] VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வழிமுறைகளும் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

[illegible]

[illegible] 5, 2024 வெள்ளிக்கிழமை அன்று [illegible] TDS [illegible]

ரெடிங்டன் லிமிடெட்டுக்காக

[illegible]